13.05.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு

சென்னை: வங்க கடலில், இலங்கை அருகே ஏற்பட்டுள்ள, மேல் அடுக்கு காற்று சுழற்சியால், தென் மற்றும் வட தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதுகுறித்து, மையத்தின் இயக்குனர் ரமணன் கூறியதாவது: வங்க கடலில் ஏற்பட்டுள்ள மேல் அடுக்கு காற்று சுழற்சியால், தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. குறிப்பாக, தென் தமிழகத்தின் பெரும்பாலான இடங்களிலும், வட தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், மழை பெய்யலாம். சென்னையைப் பொறுத்தவரை, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மழை அல்லது இடியுடன் கூடிய மழை, ஒரு சில இடங்களில் பெய்ய வாய்ப்பு உண்டு. வெப்பம், 35 மற்றும், 29 டிகிரி செல்சியஸ் ஆக இருக்கக் கூடும். இவ்வாறு, அவர் கூறினார்.

### சம்பா சாகுபடி, கர்நாடக வரத்தால் அரிசி விலை 16 சதவீதம் குறைவு

திண்டுக்கல்: தமிழகத்தில் சம்பா சாகுபடி மற்றும் கர்நாடக 'ஸ்டீம்' பொன்னி அரிசி வரத்து அதிகரித்துள்ளதால், அரிசி விலை 16 சதவீதம் குறைந்துள்ளது.தமிழகத்தில் தை மாதம் துவங்கி ஆவணி மாதம் வரை சம்பா சாகுபடி நடைபெறும். ஐ.ஆர்.20, ஐ.ஆர்.8, டொப்பி, குதிரைவாலி, கிச்சடி சம்பா, மிளகி (கேரளத்தில் அதிகளவில் பயன்படுத்துவது), சிகப்பரிசி (மட்டை ரகம்) போன்ற பாரம்பரிய ரகங்கள் விளைச்சல் இல்லை. இந்நிலையில், தமிழகத்தில் இட்லி அரிசி, கல்சர், டீலக்ஸ், என்.

45' ரக அரிசிகள் கடந்த மூன்று வாரங்களில் 16 சதவீதம் விலை குறைந்துள்ளது. இட்லி, கல்சர் அரிசி ரகங்கள் நூறு கிலோ மூடை ரூ.2800 வரை விற்பனையானது. தற்போது ரூ.400 குறைந்து ரூ.2400 விற்பனையாகிறது. நூறு கிலோ மூடை ரூ.3600க்கு விற்ற டீலக்ஸ் ரகங்கள், தற்போது ரூ.3250 வரை விற்பனையாகிறது. இவை கிலோ ரூ.32க்கு விற்பனையாகிறது. தமிழகத்திற்கு மாதந்தோறும் கர்நாடகத்தில் இருந்து 5000 டன் அரிசி வரத்து உள்ளது. தற்போது தமிழக சம்பா சாகுபடி அறுவடை துவக்கம் கர்நாடக வரத்து ஆகியவற்றால் மேற்கண்ட அரிசி ரகங்களின் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. திண்டுக்கல் தொழில் வர்த்தகர்கள் சங்க தலைவர் கிருபாகரன் கூறியதாவது: இருபது ஆண்டுகளுக்கு முன்பே சத்துள்ள பாரம்பரிய அரிசிகள் சாகுபடி செய்வது, 'அதிக விளைச்சல் இல்லாததால் நிறுத்தப்பட்டது. தற்போது, விற்பனையாவது இட்லி, கல்சர், டீலக்ஸ், என்5 ரகங்கள் மட்டுமே. கர்நாடக மாநில வரத்து அதிகரிப்பு, சம்பா சாகுபடி அறுவடை சீசன் துவங்கியுள்ளதால் விலை குறைந்து வருகிறது. இன்னும் 2 மாத காலம் இந்த விலை தொடரும், என்றார்.

**திண்டுக்கல்லில் செவ்வந்திக்கு மாற்றாக கிடாசெந்தி பூ சாகுபடி**




திண்டுக்கல்: நல்ல விலை கிடைப்பதால் திண்டுக்கல் பகுதியில் செவ்வந்திக்கு மாற்றாக கிடாசெந்தி பூவை விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர்.திண்டுக்கல் அருகே ஏ.வெள்ளோடு, கல்லுப்பட்டி, செட்டியப்பட்டி, கோம்பை பகுதிகளில் கிடாசெந்தி பூ சாகுபடி

செய்யப்படுகிறது. இவை செவ்வந்தி பூவை போன்று மணமும், தோற்றமும் இருக்கும். அவற்றை விட இதழ்களின் அளவு பெரியதாக இருக்கும். இந்த பூக்கள் மூலம் கட்டப்படும் மாலைகளுக்கு திண்டுக்கல், திருச்சி, கரூர் பகுதிகளில் கிராக்கி உள்ளது. இதனால் வியாபாரிகள் கிடாசெந்தி பூக்களை விரும்பி வாங்குகின்றனர். இந்த பூவின் விலை ஒருபோதும் குறைவதில்லை. கிலோ ரூ.100 முதல் ரூ.150 வரை விற்கப்படும். கிறிஸ்தவர்களின் கல்லறை திருவிழா போன்ற சமயங்களில் ரூ.200 வரை விற்கப்படும். கல்லுப்பட்டி விவசாயி ஏ.புஷ்பம் கூறியதாவது: நல்ல விலை கிடைப்பதால் செவ்வந்திக்கு மாற்றாக கிடாசெந்தியை சாகுபடி செய்கிறோம். ஆடி மாதத்தில் பயிரிடப்படும். மூன்றாவது மாதத்தில் இருந்து ஆண்டு முழுவதும் பூக்கும். பூக்களின் அளவு பெரிதாக இருப்பதால் அதிக எடை கிடைக்கும். சாகுபடி, பராமரிப்பு செலவும் குறைவு, என்றார்.

## பெரியாறு அணை 115 அடியை எட்டியது: முதல்போக சாகுபடிக்கு ஜூன் 1ல் திறப்பு

தேனி: பெரியாறு அணை நீர் மட்டம் 115 அடியை கடந்ததால் முதல்போக சாகுபடிக்கு ஜூன் 1 ல் தண்ணீர் திறக்கப்படுகிறது.

தேனி மாவட்டத்தில் இந்த ஆண்டு கோடையில் நல்ல மழை பெய்வதால் அக்னி நட்சத்திரம் வெயில் தாக்கம் இல்லாத அளவிற்கு இதமான சூழல் நிலவுகிறது. மாலை நேரங்களில் மாவட்டம் முழுவதும் பரவலாக மழைபெய்து வருகிறது. தற்போது கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கோடை சாகுபடி முடிந்து நஞ்சை தரிசில் பாசிப்பயறு, உளுந்து மற்றும் பயறு வகைகள் சாகுபடி செய்துள்ளனர். பெரியாறு அணை நீர்மட்டம் 115 அடியை கடந்தால் ஜூன் முதல்தேதி முதல்போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்கவேண்டும். தற்போது பெய்யும் மழையால் பெரியாறு அணையில் நீர் மட்டம் 115.50 அடியாகஉள்ளது. அணையில் 1817

மில்லியன் கன அடிநீர் உள்ளது. வினாடிக்கு 556 கன அடிநீர் வரத்தும், 150 கனஅடிநீர் வெளியேற்றப்படுகிறது. ஜூன் 1 க்கு முன்னதாகவே அணையின் நீர் மட்டம் 115 அடியை எட்டியதால் இந்த ஆண்டு கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள 14,707 ஏக்கரில் முதல்போக நெல் குறுவை சாகுபடிக்கு பெரியாறு அணை திறப்பது உறுதியாகி உள்ளது. இதனால் கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் நாற்றங்கால் தயார் செய்யும் பணியை துவக்க உள்ளனர். நாற்றங்கால் அமைத்து 25 முதல் 30 நாட்களில் நடவுக்கு தயாராகிவிடும். அதை தொடர்ந்து தென்மேற்கு பருவமழை மே கடைசி வாரத்தில் பெய்யும் என எதிர்பார்க்கின்றனர். குறுகியகால மற்றும் நடுத்தர நெல் ரகங்களான பி.பி.டி., ஜே.ஜி.எல்., கோ51 நெல்ரகங்களை வேளாண் துறையினர் பரிந்துரை செய்துள்ளனர். இப்பயிர் 115 நாட்களில் அறுவடைக்கு தயாராகிவிடும். அணையின் நீர்மட்டம் 115 அடியை எட்டியதால் முதல்போக சாகுபடிக்கு பெரியாறு அணையில் தண்ணீர் திறந்து விட வேண்டும் என விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை வைத்துள்ளனர். இதன் அடிப்படையில் ஜூன் முதல்தேதி முதல்போக சாகுபடிக்கு தண்ணீர் திறப்பது உறுதியாகி உள்ளது.

**எலுமிச்சை பயிரிட்டு வாரம் ரூ.10 ஆயிரம் சம்பாதிக்கலாம்**



திண்டுக்கல் அருகே கோட்டைப்பட்டியை சேர்ந்த விவசாயி ஜெ.சரவணன் ஒரு ஏக்கரில் எலுமிச்சை சாகுபடி செய்தார். இவர்

"ராஜமுந்திரி' என்ற நாட்டு ரகத்தை கன்றுக்கு ரூ.50 வீதம் வாங்கினார். 2 அடி ஆழம் 2 அடி அகலம் உள்ள குழிகள் தோண்டி அதில் குப்பையை கொட்டி கன்றுகளை நட்டார். ஒவ்வொரு கன்றும் 20 க்கு 20 அடி இடைவெளியில் நடப்பட்டது. ஒரு ஏக்கரில் 100 கன்றுகளை நட்டார். இயற்கை விவசாய முறையில் உரமிட்டு வருகிறார். செடிகள் நட்டு 4 ஆண்டுகளுக்கு பின் காய்க்க துவங்கியது. ஒரு மரத்தில் 100 காய்களுக்கு குறையாமல் காய்க்கின்றன. ஒவ்வொரு பழமும் குறைந்தது 80 கிராம் வரை உள்ளது. சில பழங்கள் 120 கிராம் வரை உள்ளன (சாதாரணமாக 60 கிராம்). தலா ஒரு மாத இடைவெளியில் ஆண்டுக்கு 3 முறை காய்க்கின்றன. ஒவ்வொரு முறையும் 12 வாரங்கள் வரை தொடர்ந்து காய்களை பறிக்கின்றனர். வாரத்திற்கு 400 கிலோ காய்கள் கிடைக்கின்றன. குறைந்தது ரூ.10 ஆயிரம் வரை கிடைக்கிறது.

**விவசாயி கூறியதாவது**: எலுமிச்சை செடிகளுக்கு கால்நடைகளின் எரு, கழிவு, குப்பையை உரமாக இடுகிறோம். பசுந்தாள் உரங்களும் பயன்படுத்துகிறோம். 15 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்சுகிறோம். நாட்டுரகம் என்பதால் 80 ஆண்டுகள் வரை காய்க்கும். செடிகளை முறையாக கவாத்து செய்து பராமரிக்கிறோம். இதனால் காய்கள் பறிப்பதில் சிரமம் இல்லை என்றார். தொடர்புக்கு 97915 00783.

**கோரை - ஒரு வருமானம் தரும் களை**



கோரை என்பது உலகெங்கும் அதிகமாகக் காணப்படும் ஒரு களை ஆகும். இது உலகின் ""மிகவும் மோசமான களை" என்று வல்லுநர்களால் வர்ணிக்கப்படுகிறது. உலகின் 92 நாடுகளில் இது மிகவும் பிரச்னைக்குரிய களையாகும். கரும்பு, நெல், காய்கறிகள் மற்றும் மக்காச்சோளம் போன்ற 50க்கும் மேற்பட்ட பயிர்களை மிகவும் பாதிக்கிறது. ஆனால் கோரையின் கிழங்குகள் மருத்துவக் குணம் உடையதாகையால் மூலிகைக் கம்பெனிகளால் அதிக அளவில் கொள்முதல் செய்யப்படுகிறது. வியாபார ரீதியாக கோரைக் கிழங்கு நாகர்மோதா என அழைக்கப்படுகிறது. கோரையின் தாயகம் ஆப்ரிக்கா மற்றும் தெற்கு ஆசிய நாடுகள் ஆகும்.விவசாயிகள் சந்திக்கும் பிரச்னைகள் இதனுடைய வேர் மற்றத் தாவரங்களைப் பாதிக்கும் வேதிப்பொருளை வெளியிடுகிறது. கோரையானது சங்கிலித் தொடர் போன்று கிழங்குகளைத் தோற்றுவிப்பதால் முழுமையாக நீக்கம் செய்வது கடினம். களை நீக்கம் செய்யும் போதும் இதனுடைய உடைந்த வேர் பூமிக்குள் இருப்பதால் மீண்டும் வளரும். கிழங்குகள் வறட்சி மற்றும் பிற காரணிகளால் பாதிக்கப்படாது. களைக் கொல்லிகள் கோரையின் இலைப் பகுதியை மட்டுமே பாதிக்கும், கிழங்குகளையல்ல. எனவே இத்தகைய பிரச்னைக்குரிய களையின் மூலம் விவசாயிகளுக்கு வருமானம் தரும் வழிகளைக் காண்போம். கோரையின் மருத்துவப் பயன்கள்: பயன்படும் பகுதி: கிழங்கு கோரையின் கிழங்கு இந்திய மற்றும் சீன மருத்துவத்தில் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கிழங்குகளில் உள்ள சைபரோன் என்ற மருந்துப் பொருள் இதனுடைய மருத்துவக் குணத்திற்கு காரணமாகும். காய்ச்சல், செரிமானம், வயிற்றுப்போக்கு, வலி நிவாரணி, முடி வளர்ச்சி, ஒழுங்கற்ற மாதாவிடாய், நரம்புத் தளர்ச்சி போன்றவற்றிற்கு நிவாரணியாகப் பயன்படுகிறது. இரத்த அழுத்தத்தைச் சீராக்கும். பாகிஸ்தானில் வயிறு மற்றும் நரம்பு நோய்களுக்கும், சீனாவில் புற்றுநோயை குணப்படுத்தவும் பரிந்துரைக்கப்படுகிறது. கோரையின் கிழங்குகள் மிகுந்த சத்துக்களை

உடையது. ஆகையால் பலரால் விரும்பி உண்ணப்படுகிறது. ஆப்ரிக்காவில் பஞ்சம் ஏற்படும் காலங்களில் மக்கள் இதனையே உண்கின்றனர். சந்தை வாய்ப்பு: இந்தியா மற்றும் உலக நாடுகளில் உள்ள ஏராளமான மூலிகை சார்ந்த மருந்து கம்பெனிகள் கொள்முதல் செய்கின்றன. மேலும் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் இதனை கொள்முதல் செய்கின்றன. இந்தியாவில் இருந்து கடந்த ஆண்டில் 158, 864க்கு ஈ மதிப்பிலான கோரைக்கிழங்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. நெதர்லாந்து அதிக அளவில் கொள்முதல் செய்கிறது. மேலும் ஈரான், இலங்கை, அமெரிக்க ஐக்கிய நாடுகளும் இந்தியாவில் இருந்து கொள்முதல் செய்கின்றன. தமிழ்நாட்டில் விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருச்சி மாவட்ட மூலிகை சேகரிப்போரால் தரிசு நிலங்களில் இருந்து சேகரிக்கப்பட்டு மேற்கண்ட ஊர்களில் உள்ள மூலிகை வியாபாரிகளிடம் விற்பனை செய்கின்றனர். அறுவடை: கோரைக் கிழங்கானது ஈரம் மிகுந்த மற்றும் வறட்சியான தரிசு நிலங்களிலும் ஆண்டு முழுவதும் காணப்படும். எனினும் இதற்கான அறுவடைக் காலம் நவம்பர் - ஜனவரி ஆகும். கிழங்குகள் தோண்டப்பட்டு, கழுவி சூரிய ஒளியில் காய வைக்க வேண்டும். குறைந்த பட்சம் 1 வாரம் வரை காய வைத்தல் அவசியம் ஆகும். அதன் பின்பு கிழங்கினை ஒட்டியுள்ள முடி போன்ற நீட்சிகள் நெருப்பினில் பொசுக்கி நீக்க வேண்டும். பின்பு விற்பனைக்கு அனுப்பலாம். சாக்குகளில் நிரப்பும் முன்பு மண் மற்றும் மெல்லிய வேர் போன்ற கழிவுகள் நீக்கப்பட வேண்டும். கோரையில் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவு கிழங்குகளை உற்பத்தி செய்யும் பலவித கோரைகள் உள்ளன. சிறிய கிழங்குகளை உடைக்கும் போது வெள்ளை நிறத்திலும், பெரிய கிழங்குகளின் உட்பகுதி மஞ்சள் நிறத்திலும் காணப்படும். மூலிகைக் கம்பெனிகள் பெரும்பாலும் சிறிய கிழங்குகளையே அதிக அளவில் கொள்முதல் செய்கின்றன. எனவே கோரையும் வருமானம் தரும் களையேயாகும்.

**- ந.கணபதிசாமி**

**திருமங்கலம், மதுரை.**

***சின்ன சின்ன செய்திகள்***



*கொடுக்காப்புளி*: வெயிலையும், வெப்பத்தையும் விரும்பும் வித்தியாசமான பழமாக இருப்பது கொடுக்காப்புளி. உவட்டு பூமியிலும், உவர்நீரிலும் கூட வளரும் தன்மையுடையது. தமிழகத்தில் கொடுக்காப்புளியை கோணப்புளியங்காய் என்றும் அழைக்கின்றோம். கொடுக்காப்புளி கால்நடைகளுக்கு ஏற்ற தீவன மரம். இதன் தழைகள் வெள்ளாடுகளுக்கு பிரியமான தீனி. கொடுக்காப்புளி தரிசைத் தங்கமாக்கும் மரம். பல்வேறு சூழ்நிலைகளிலும் வளரக்கூடியது. மண் அரிமானம் ஏற்பட்டு வடிவம் இல்லாமல் கிடக்கும் பூமியைக்கூட சமன்படுத்தி நடலாம். மணல் பகுதிகள், தேரிகளிலும் நடலாம். கடலோர மணல் பகுதிகள், உவர் நிலங்கள், உதவாக்கரை பூமிகளிலும் வளர்ந்திருக்கும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஜூன் - ஜூலை அக்னி நட்சத்திர வெயிலின் கடுமை குறைந்த தருணம், அப்போது தென்மேற்கு பருவமழையும் ஆரம்பித்திருக்கும். இத்தருணத்தில் கன்றுகளை நடலாம். பி.கே.எம்.1 ரகம் தரத்தில் சிறந்தது. நல்ல சுவை உடையது. கொடுக்காப்புளியில் ஒட்டுக்கன்றுகள் கிடைக்குமிடம், ஏந்தல் நர்சரி கார்டன் - அருண் நாகராஜ், சாலைப்புதூர் (திண்டுக்கல் - வத்தலக்குண்டு ரோடு) திண்டுக்கல் மாவட்டம். அலைபேசி : 98421 34208, 98652 34208. ""கிஸ்ஸான் நர்சரி", கண்ணையா சந்தூரி கிருஷ்ணகிரி மாவட்டம், அலைபேசி : 94434 81064. தோட்டக்கலைக்கல்லூரி,

பெரியகுளம் - வத்தலக்குண்டு ரோடு, திண்டுக்கல் மாவட்டம். போன் : 04546 - 233 225, 231 726. தோட்டங்களில் பயிரிட 30ஙீ30 இடைவெளியில் ஏக்கருக்கு 48 கொட்டைக்கன்றுகள் நட்டு வளர்க்கலாம். ஊடு பயிராக வளர்ப்பதனால் 54ஙீ54 இடைவெளியில் ஏக்கருக்கு 15 கன்றுகளை மட்டும் நட்டு வளர்க்கலாம்.

*ஓசோன் மூலம் பூச்சிகள் கட்டுப்பாடு*: உளுந்து, பச்சைப்பயற்றில் பூச்சிகள், வண்டுகளைக் கட்டுப்படுத்த உணவு மற்றும் வேளாண் பதன் செய்யும் துறை, த.வே.ப.கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஓசோன் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நுட்பம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஓசோன், ஆக்ஸிஜனின் மற்றொரு உருவம். இது தற்பொழுது தண்ணீரில் உள்ள பாக்டீரியாவை அழிக்கவும், மருத்துவமனையில் பயன்படுத்தப்படும் கருவிகளில் உள்ள கிருமிகளை அழிக்கவும், கழிவுநீர் சுத்திகரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது. ஓசோன் வாயுவை கரோனா வெளியேற்றம் முறையில் ஓசோன் ஜெனரேட்டர் கொண்டு உற்பத்தி செய்யலாம். இந்த ஜெனரேட்டரில் ஆக்சிஜன் வாயு உள்ளே அனுப்பப்பட்டு ஓசோனாக மாற்றமடைந்து வெளியே வருகின்றது. இதை நாம் பயறு சேமிக்கும் கலன்களின் உள்ளே அனுப்பி பூச்சிகளை அழிக்கலாம். ஓசோன் தானாகவே 20 நிமிடங்களில் ஆக்சிஜன் மாறுவதால், சுற்றுப்புற சூழலோடு தீங்கு விளைவிப்பதில்லை. 500 பிபிஎம் செறிவு கொண்ட ஓசோன் பச்சைப்பயறில் உள்ள பூச்சிகளை அழிக்க 6 மணி நேரம் எடுத்துக் கொள்கிறது.

ஓசோன் வாயு மூலம், பயறுகளில் வரும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதால் இரசாயனத்தின் நச்சுத்தன்மையையும் தவிர்த்து, சுற்றுப்புற சூழலையும் பாதுகாக்கலாம். தகவல் : முனைவர் பா.பாண்டிச்செல்வம், முனைவர் வெ.திருப்பதி, முனைவர் ச.மோகன், உணவு மற்றும் வேளாண் பதனி செய்துறை, த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003. அலைபேசி : 0422 - 661 1268.

*உழவர் உறுதுணை மையம்* : Farmers Facility Centre, வேளாண்மைத் தொழில்நுட்ப தகவல் மையம், Agricultural Technology Information Centre - ஆகியவை உழவர்களுக்கு தேவையான உதவிகளையும் வழங்கி வருகின்றன.

*மேலும் விபரங்களுக்கு* : இயக்குநர், விரிவாக்கக் கல்வி இயக்ககம், த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003.

*போன்* : 0422 - 661 1219, 661 1315.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**இயந்திர நடவிற்கு தயாராகும் நாற்றுகள்**

பொன்னேரி: இயந்திர நடவிற்காக, பிளாஸ்டிக் தட்டுகளில் நெல் நாற்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. மீஞ்சூர் ஒன்றியத்தில் சம்பா, குறுவை என, ஆண்டுக்கு இரண்டுமுறை நெல் பயிரிடப்படுகிறது. ஒரு பருவத்திற்கு, 26 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் பயிரிடப்படுகிறது. விவசாயிகள், தற்போது குறுவை சாகுபடிக்கு, விளை நிலங்களை உழுது தயார்படுத்தி வருகின்றனர். விவசாயிகள் சில ஆண்டுகளாக, பணியாட்களை கொண்டு நடவு பணிகள் மேற்கொள்வதை தவிர்த்து, இயந்திரங்கள் மூலம் நடவு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக, பிரத்யேகமாக நாற்றுகள் வளர்க்கப்படுகின்றன.பிளாஸ்டிக் தட்டுகளில் உரத்துடன் கூடிய மண்ணை பரப்பி, அதில் நெல் விதைகளை போட்டு, அதன் மீது வலையை கொண்டு மூடுகின்றனர். ஒரு ஏக்கருக்கு, 75 பிளாஸ்டிக் தட்டுகளில் வளர்க்கப்படும் நாற்றுகள், இயந்திரத்தின் மூலம் நடவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு நாற்றும், 15 செ.மீ., உயரம் வளர்ந்த உடன், 15 முதல், 18 நாட்களுக்குள் நடவு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது, பொன்னேரி பகுதியில், இயந்திர நடவு பணிகளுக்காக, தேவராஞ்சேரி, சின்னகாவணம் உள்ளிட்ட இடங்களில், நாற்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

## விழுப்புரத்தில் 15ம் தேதி விவசாயிகள் குறைதீர்ப்பு

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு நாள் கூட்டம், வரும் 15ம் தேதி நடக்கிறது. விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 15ம் தேதி காலை 11 :00 மணியளவில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் நடக்கிறது. இந்த நாளில் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் பங்கேற்று, தங்களின் கோரிக்கைகளை மனுவாக அளித்து பயனடைய வேண்டுமென கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

## உளுந்தூர்பேட்டை பகுதிகளில் மழை

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று மழை பெய்ததால் கோடை வெப்பம் தணிந்தது. உளுந்தூர்பேட்டை, எலவனாசூர்கோட்டை, திருநாவலூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று மதியம் 1:00 மணி முதல் திடீரென லேசான மழை பெய்தது. இந்த மழையால் கோடை வெப்பத்தின் தாக்கம் ஓரளவு தணிந்தது.

## கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் ரூ.50லட்சத்திற்கு எள் கொள்முதல்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் நேற்று, 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான எள் கொள்முதல் செய்யப்பட்டது. கள்ளக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் எள் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. இதனால் கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு எள் வரத்து படிப்படியாக அதிகரித்து வருகின்றது. கள்ளக்குறிச்சி கமிட்டிக்கு நேற்று பல்வேறு பகுதியைச் சேர்ந்த 812 விவசாயிகள் 1,000 எள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஒரு மூட்டை எள் விலை

அதிகபட்சமாக 5,318 ரூபாய், குறைந்தபட்சமாக 4,469 ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டது. மொத்தம் 1,000 எள் மூட்டைகள் 50 லட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டன. இதேபோல் 350 மக்காசோளம் மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதிகபட்சமாக 1,333 ரூபாய், குறைந்தபட்சமாக 1,279 ரூபாய் என விலை நிர்ணயம் செய்தனர். மொத்தம் 350 மக்காச்சோள மூட்டைகள் 4 லட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டன. கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் நேற்று 56 லட்சம் ரூபாய் மதிப்பிலான விளை பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டது.

## ரூ. 55 லட்சத்திற்கு மஞ்சள் வர்த்தகம்

ராசிபுரம் : நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 950 மூட்டை மஞ்சள், 55 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஏலம் நடக்கும்.தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள், தங்கள் விளை நிலத்தில் சாகுபடி செய்துள்ள மஞ்சளை, அறுவடை செய்து விற்பனைக்கு கொண்டு வருவர்.மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர். அதன்படி நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 950 மூட்டை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. அதில், விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 9,221க்கும், குறைந்த பட்சம், 7,389 ரூபாய்க்கு ஏலம் போனது.உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், 8,041க்கும், குறைந்த பட்சம், 6,700 ரூபாய்க்கும் ஏலம் போனது.

அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 18,007, குறைந்த பட்சம், 6,889 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று ஒரே நாளில், 950 மூட்டை மஞ்சள், 55 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## மே, 26ல் நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்

நாமக்கல் : "நாட்டுக்கோழி வளர்ப்பும், மூலிகை முதலுதவி மருத்துவமும் என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி வகுப்பு, வரும், 26ம் தேதி கால்நடை மருத்துவமனையில் நடக்கிறது' என, ஆராய்ச்சி மைய தலைவர் டாக்டர் மோகன் தெரிவித்துள்ளார். அவர், வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் - திருச்சி சாலை, கால்நடை மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள, கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில், பண்ணையாளர்களுக்கான நாட்டுக்கோழி வளர்ப்பும், மூலிகை முதலுதவி மருத்துவமும் என்ற தலைப்பில், ஒரு நாள் பயிற்சி வகுப்பு, வரும், 26ம் தேதி நடக்கிறது.அன்று மதியம், 1.30 மணிக்கு நடக்கும் இப்பயிற்சியில், விருப்பம் உள்ள பண்ணையாளர், விவசாயிகள் ஆகியோர் பங்கேற்கலாம். மேலும் விபரங்களுக்கு, 04286-233 230 என்ற தொலைபேசி எண்ணில தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

## அணைகளுக்கு நீர் வரத்து அதிகரிப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி:தர்மபுரி மாவட்டத்தில், தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக, அணைகள் உள்ளிட்ட நீர் ஆதாரங்களுக்கு தண்ணீர் வரத்து தொடங்கியுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தர்மபுரி மாவட்டம், விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம். மாவட்டத்தில் உள்ள தொப்பையாறு, வாணியாறு, சின்னாறு, வரட்டாறு, நாகவதி, கேசர்குழி, ஈச்சம்பாடி, தும்பலஹள்ளி உள்ளிட்ட அணைகள் மற்றும் அணைக் கட்டுக்கள் உள்ளிட்டவை மற்றும் மாவட்டத்தில் உள்ள,

100க்கும் மேற்பட்ட, ஏரி, குளங்களை நம்பி, பல ஆயிரம் ஹெக்டர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது.கடந்த சில ஆண்டுகளாக, போதிய பருவ மழை இல்லாததால், மாவட்டத்தில் உள்ள அணைகள் மற்றும் ஏரி, குளங்கள் உள்ளிட்ட நீர் ஆதாரங்களில் தண்ணீர் வரத்து கேள்வி குறியானது. குறிப்பாக, தும்பலஹள்ளி அணைக்கு கடந்த, 10 ஆண்டுகளுக்கு மேலாக, தண்ணீர் இல்லாத நிலையே காணப்படுகிறது.இதனால், இந்த அணையை நம்பி பாசன வசதி பெற்று வந்த விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்தாண்டு, தர்மபுரி மாவட்டத்தில், தென் கிழக்கு மற்றும் வடகிழக்கு பருவமழை ஏமாற்றியதால், ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். கோடைக்கு முன்பே, மாவட்டத்தில் வெயில் கொளுத்தி வந்ததால், மாவட்டத்தில் உள்ள அணைகள் மற்றும் ஏரி, குளங்களில், தண்ணீர் அளவு பாதிக்கப்பட்டது. இதனால். பெரும்பாலான ஏரி, குளங்களில் வறண்டது.இதே போன்று, அனைத்து அணைகளிலும், தண்ணீர் மட்டம் வெகுவாக குறைந்து வந்தது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்தனர். இந்நிலையில், விவசாயிகளின் கவலையை போக்கும் விதமாக, தர்மபுரி மாவட்டத்தில், ஏப்ரல் மாத மத்தியில் இருந்து அவ்வப்போது, கோடை மழை தொடர்ந்து பெய்து வருகிறது.இதனால், வெயில் அளவு குறைந்ததுடன், ஒரு சில ஏரி, குளங்கள் மற்றும் அணைகளுக்கு தண்ணீர் வரத்து தொடங்கியது. நேற்று நிலவரப்படி, 50 அடி கொள்ளளவு கொண்ட சின்னாறு அணையில், 19.78 அடி நீர் அளவு பதிவானது. 50.18 அடி கொண்ட தொப்பையாறு அணையில், 6.23 அடியும், 24.60 அடி கொண்ட நாகவதி அணையில், 2 அடியும், 25.20 அடி கொண்ட கேசர்குளி அணையில், 15.48 அடியும், 17.35 அடி கொண்ட ஈச்சம்பாடி அணைக்கட்டில், முழு கொள்ளளவான, 17.35 அடி தண்ணீரும், 34.45 அடி கொள்ளளவு கொண்ட வரட்டாறு

அணைக்கட்டில், 15.43 அடி தண்ணீரும் உள்ளது.தொடர்ந்து கோடை மழை பெய்து வருவதால், மாவட்டத்தில் உள்ள அணைகள் மற்றும் ஏரி, குளங்களுக்கு தண்ணீர் வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**சுண்டைக்காய் சேகரிக்கும் பயணிகள்**

பந்தலுார் : பந்தலுார் பகுதியில் அதிகமாக காணப்படும் சுண்டைக்காய்களை சமவெளிப்பகுதி சுற்றுலாப்பயணிகள் அதிகளவில் சேகரித்து செல்கின்றனர். நீலகிரி மாவட்டம் கூடலுார் வனக்கோட்டத்துக்கு உட்பட்ட கூடலுார், பந்தலுார் பகுதி சாலையோரங்களிலும், வனப்பகுதிகளிலும் சுண்டைக்காய்கள் அதிகளவில் காணப்படுகிறது.இவை, உடலுக்கு ஊட்டச்சத்து தரக்கூடியதும், ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் தரக்கூடியது. இதில், வைட்டமின், கால்சியம், குளுக்கோசைடுகள், இரும்பு சத்து அடங்கியுள்ளது. இந்தளவு முக்கியத்துவம் கொண்ட காட்டுச்சுண்டைகளின் தன்மை குறித்து தெரியாத நிலையில், இப்பகுதி மக்கள் இதனை கண்டுக்கொள்வதில்லை.ஆனால், சமவெளிப்பகுதிகளிலிருந்து வரக்கூடிய சுற்றுலாப்பயணிகளுக்கு இதன் முக்கியத்துவம் தெரியும் என்பதால், சாலையோரங்களில் காணப்படும் சுண்டைக்காய்களை பறித்து செல்கின்றனர். இது குறித்து விழுப்புரத்தை சேர்ந்த சுற்றுலாப்பயணி விஜயலட்சுமி கூறுகையில், “சுண்டைக்காய் வத்தல், காரக்குழம்பு, சூரணம் என பலவகைகளில் இதனை உட்கொள்ளலாம். பல்வேறு மருத்துவ குணங்கள் கொண்டதாக இருப்பதால் இதனை எங்கள் பகுதியில் சந்தையில் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை உள்ளது. இப்பகுதியில் இயற்கையாக விளைந்த சுண்டைக்காய்களை பார்த்தவுடனே அதனை பறிக்க தோன்றுகிறது,” என்றார். இதன் வேர்களை சிலர், கேரள மாநிலம் கோட்டக்கல் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு அதிகளவில் கொண்டு செல்கின்றனர்.

## அக்னி நட்சத்திரத்தில் திருச்சியில் தொடர் மழை

திருச்சி,:அக்னி நட்சத்திர காலம் துவங்கி, ஒரு வாரம் ஆன நிலையில், திருச்சியில், நேற்று முன்தினமும், நேற்றும் மழை பெய்தது.தமிழகத்தில் வங்கக்கடலில் வெப்ப சலனம் காரணமாக, காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி, மாநிலத்தின், பல பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. திருச்சி மாவட்டத்தில், அக்னி நட்சத்திரம் துவங்கிய, 4ம் தேதிக்கு முன்பே, தினமும் மழை வருவதற்காக சூழல் ஏற்படுவதும், கருமேகங்கள் கலைந்து போவதுமாக ஏமாற்றி வந்தது.நேற்று முன்தினம் காலை, 10 மணிக்கு திடீரென மழை பெய்தது. அரை மணி நேரம் பெய்த மழையால், சாக்கடை கழிவுநீருடன் மழை நீர் கலந்து, சாலைகளில் ஓடியது.மீண்டும் மாலையில் மழை பெய்தது. மாவட்டத்தில் துறையூரில், 3 மி.மீ., விமான நிலையம், 7.20, திருச்சி டவுன், 1.5, கல்லக்குடி, 4.10, குப்பம் பட்டி, 3, பொன்மலை, 1.80, ஜங்சன், 2.40, அதிகபட்சமாக தென்பரநாட்டில், 15 மி.மீ., மழை பதிவாகி இருந்தது.நேற்றும் காலை முதல் மதியம் வரை மழை மேகங்கள் சூழ்ந்து, வெயில் இன்றி காணப்பட்டது. மதியம், 2 மணிக்கு மேல் திடீரென பலத்த காற்றுடன், மழை பெய்யத் துவங்கியது. இதனால், அக்னி நட்சத்திரத்தின் வெயில் கடுமை தெரியாமல் மக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

## பழநியை குளிர்வித்த மழை

பழநி: பழநியில் அக்கினிநட்சத்திர விழா துவங்கியுள்ளது. இதனை முன்னிட்டு ஏராளமானவர்கள் மலைக்கோயில் கிரிவீதியை வலம் வருகின்றனர். கடந்த சிலநாட்களாக காலையில் வெயிலும் மாலையில் மேகமூட்டம் காணப்பட்டது. நேற்று மாலை 5.30 மணி முதல் மாலை 6.15 மணி வரை காற்றுடன் மழைபெய்தது. இதனால் ஆர்.எப்.,ரோட்டிலுள்ள மரத்தின் கிளைமுறிந்து மின்கம்பியில் விழுந்த காரணத்தால் அரைமணி நேரத்திற்கு மேலாக மின்தடை ஏற்பட்டது.

## அக்னியை விரட்டிய மழை! மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்கிறது... ண கண்மாய், அணைகளுக்கு நீர் வரத்து அதிகரிப்பு

தேனி: அக்னி நட்சத்திரத்தில் வெயில் கடுமையாக இருக்கும் என பொதுமக்கள் அஞ்சிக்கொண்டிருந்த நிலையில், தினமும் மாலையில் "குளுகுளு' சீதோஷ்ணநிலை நிலவுவதால் மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். மானாவாரி பயிர்கள் விளைச்சல் இந்த முறை அதிகளவில் இருக்கும் என விவசாயிகள் உற்சாகத்தில் உள்ளனர்.தேனி மாவட்டத்தில் கடந்த அக்டோபரில் தொடங்கிய மழை டிசம்பர் வரை நீடித்தது. இடையில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மழை குறைந்தது. மார்ச் ல் மீண்டும் மழை பெய்யதொடங்கியது. ஏப்ரலில் சித்திரை முதல்நாளே மழையுடன் துவங்கியது. தொடர்ந்து மூன்று நாட்கள் பெய்த மழை அதன் பின் ஒருநாள் விட்டு ஒரு நாள் மழை பெய்து கொண்டு இருந்தது. கடந்த மே 4 சித்ராபவுர்ணமி அன்று அக்னிநட்சத்திரம் தொடங்கியது. அப்போது மழை குறைந்து வெயில் அதிகரிக்கும் என பொதுமக்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் மக்களின் எதிர்பார்ப்பிற்கு மாறாக அக்னிநட்சத்திரம் தொடங்கிய நாள் முதல் தற்போது வரை தினமும் மாலை வேளைகளில் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துவருகிறது. தொடக்கத்தில் ஒரு மணிநேரம், இரண்டு மணி நேரம் மட்டுமே பெய்து வந்த மழை கடந்த மூன்று நாட்களாக மாலை 4 மணிக்கு மேல் தொடங்கி இரவு வரை நீண்ட நேரம் பெய்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னர் கூடலூரில் 19.05 மி.மீ., உத்தமபாளையத்தில் 10 மி.மீ., வைகை அணையில் 7.04 மி.மீ., மஞ்சளாறு அணையில் 17 மி.மீ., ஆண்டிபட்டியில் 31 மி.மீ., அதிகபட்சமாக வீரபாண்டியில் 76 மி.மீ., மழை பதிவானது. நேற்று முன்தினம் போடியில் 1.6 மி.மீ., கூடலூரில் 3 மி.மீ., பெரியகுளத்தில் 5 மி.மீ., பெரியாறில் 6 மி.மீ., தேக்கடியில் 3 மி.மீ., உத்தமபாளையத்தில் 2 மி.மீ., வைகை அணையில் 1.6 மி.மீ., வீரபாண்டியில் 2 மி.மீ., மழை

பதிவானது. நேற்று காலை முதல் மாவட்டம் முழுவதும் வானம் மேகமூட்டமாகவே காணப்பட்டது. இடை, இடையே சில நிமிடங்கள் வெயில் காணப்பட்டாலும் அதன் உக்கிரம் குறைந்தே காணப்பட்டது. மாலை 3.30 முதல் 6 மணி வரை பலத்த மழை பெய்தது. அதன் பின் இரவு வரை சாரல்மழை நீடித்தது. மழையால் மாவட்டத்தில் உள்ள அணைகள், கண்மாய்கள், குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. மேலும் மானவாரி பயிர்கள் விளைச்சலுக்கு உகந்ததாக உள்ளது. அக்னிநட்சத்திரத்தின் பாதிப்பை விரட்டிய மழை கடும் வெயிலுக்கு மாறாக குளிர்ந்த சீதோஷ்ணநிலையை தந்துவருகிறது.

**செவ்இளநீர் கன்றுகள் நடவு அதிகரிப்பு**

பெரியகுளம் : பெரியகுளம் பகுதிகளில் குறுகிய கால செவ்இளநீர் தெனங்கன்றுகள் அதிகளவில் நடவு செய்யப்படுகிறது. பெரியகுளம் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை மரங்கள் உள்ளன. தென்னங்கன்றுகள் நட்டு 5 ஆண்டு முதல் 7 ஆண்டுகளுக்குள் மரமாகி இளநீர் மற்றும் தேங்காய் கிடைக்கிறது. 45 நாட்களுக்கு ஒரு முறை காய் வெட்டபபடுகிறது. மரத்தின் வாழ்நாள் 70 ஆண்டுகளாகும். தற்போது குறுகிய காலத்தில் செவ்இளநீர் தென்னங்கன்றுகள் நடுவது அதிகரித்துள்ளது. நடவு செய்த மூன்று ஆண்டுகளில் மரமாகி பலனுக்கு வருகிறது. செவ்இளநீர் மரத்திலும் 45 நாட்களுக்கு ஒருமுறை இளநீர் வெட்டப்படுகிறது. மரத்தின் வாழ்நாள் 35 ஆண்டுகளாகும். இந்தவகையான மரத்தில் இளநீர் மட்டும் கிடைக்கும். முன்பெல்லாம் கோடைகாலத்தில் மட்டும் இளநீருக்கு கிராக்கி இருந்தது.

தற்போது மருத்துவ பலன் அதிகளவில் உள்ள செவ்இளநீர் அனைத்து நாட்களிலும் குடிக்கும் பழக்கம் அதிகரித்துள்ளது. இளநீர் ஒன்று 20 ரூபாய் முதல் 25 ரூபாய் வரைக்கும் விற்கப்படுவதால் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது. வியாபாரிகளும் அதிகளவில் வாங்கி

செல்கின்றனர். குறைந்த ஏக்கர் நிலப்பரப்பு உள்ளவர்கள் அதிகளவில் செவ்இளநீர் தென்னங்கன்றுகளை வளர்ப்பதற்கு ஆர்வம்காட்டி வருகின்றனர்

**வாலிநோக்கத்தில் அதிகபட்ச மழை**

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி நிலவரப்படி, அதிகபட்சமாக வாலிநோக்கத்தில் 53 மி.மீ., மழை பெய்துள்ளது. மற்ற இடங்களில் பெய்த மழையளவு விபரம்: மண்டபம்- 47, பாம்பன்- 39.10, கடலாடி- 33, கமுதி -26, முதுகுளத்தூர்- 25.20, ராமநாதபுரம்- 24.10, தீர்த்தாண்டதானம்-16, தங்கச்சிமடம்-12.80, வட்டாணம்-12, பள்ளமோர்குளம்-10, பரமக்குடி-7.50, ராமேஸ்வரம்-4.20 மி.மீ., மழை பெய்தது. மொத்த மழையளவு 311.30 மி.மீ.,ஆகும். சராசரியாக 19.46 மி.மீ.

**கோவிலாங்குளத்தில் 9.6 மி.மீ., மழை பதிவு**

விருதுநகர்: மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கோடைமழை பெய்துவருகிறது. நேற்று காலை 8.30 மணிப்படி மழையளவு (மி.மீ.,): அருப்புக்கோட்டை 5.8, சாத்தூர் 2.1, சிவகாசி 2.1, விருதுநகர் 2, காரியாபட்டி 1.4, பிளவக்கல் 5.2, வெம்பக்கோட்டை 3.4, கோவிலாங்குளம் 9.6.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தென் தமிழகத்தில் பலத்த மழைக்கு வாய்ப்பு**



தென் தமிழகம், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில், அடுத்த 24 மணி நேரத்தில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: தென்மேற்கு வங்கக் கடல், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வளி மண்டல மேலடுக்குச் சுழற்சி உருவானது. இந்தச் சுழற்சியானது, தற்போது அதே இடத்தில் நீடிக்கிறது. இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் தென் தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்யும். பலத்த மழை: அதேபோல மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் பலத்த மழை பெய்யும். செவ்வாய்க்கிழமை காலை வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பதிவாகியுள்ளது. இதில் புதுக்கோட்டை மாவட்டம்- மணமேல்குடியில் அதிகபட்சமாக 70 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. அடுத்தபடியாக, சிவகாசியில் 50 மி.மீ, நீலகிரி மாவட்டம்- குன்னூர், ராமநாதபுரம் மாவட்டம்- பாம்பன், சேலம் மாவட்டம்- சங்ககிரி ஆகிய

இடங்களில் தலா 40 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. கடலாடி, கமுதி, முதுகுளத்தூர் ஆகிய இடங்களில் 30 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. சென்னை மாநகரைப் பொருத்த வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை, இரவு நேரங்களில் ஒரு சில பகுதிகளில் மழை, அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். மாநகரின் அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 95, 84 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும். செவ்வாய்க்கிழமையன்று வேலூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 98 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெயில் பதிவானது. மற்ற மாவட்டங்களில் 95 டிகிரிக்கும் குறைவாகவே வெயில் பதிவாகியுள்ளது.

**கால்நடை வளர்ப்போருக்கு மானிய விலையில் தீவனம்**

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர்கள் பயனடையும் வகையில் மானிய விலையில் வைக்கோல் தீவனம் வழங்குவதற்காக அரசு ரூ.10 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளதாக மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: இம்மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர், காரியாபட்டி ஆகிய இடங்களில் அரசு கால்நடை மருந்தகங்களில் தலா ரூ.5 லட்சம் செலவில் உலர் தீவன கிடங்குகள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. எனவே, தீவனம் தேவைப்படுவோர் தங்களது குடும்ப அட்டை நகலுடன் மேற்கண்ட இரு கால்நடை மருந்தகங்களிலும் பதிவு செய்து கொள்ள வேண்டும். எனவே, இம்மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ள தீவன கிடங்குகளுக்கு தனித்தனியாக தரமான உலர்ந்த வைக்கோலை 21 கிலோ கட்டுக்களாக கட்டி வண்டியில் ஏற்றி குறிப்பிட்ட இடங்களில் அடுக்கி வைக்கோல் போர் போட்டுத்தர வேண்டும். அதேபோல், தொடர்ந்து 2 மாதங்களுக்கு வழங்க விருப்பம் உள்ள விவசாயிகள் ஒரு கிலோ வைக்கோல் விலையை குறிப்பிட்டு வருகிற 19ம் தேதி மாலை 5 மணிக்குள் விலைப்புள்ளிகளை கால்நடை

பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் அளிக்க வேண்டும். மேலும், இது குறித்து மண்டல இணை இயக்குநரை 9445001132 என்ற செல்லிட பேசியிலும், 04562-252706 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு தேவையான விவரங்களை அறிந்து கொள்ளலாம் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**பரமக்குடியில் 2ஆவது நாளாக மழை**

பரமக்குடி பகுதியில் தொடர்ந்து 2 ஆவது நாளாக செய்வ்வாய்க்கிழமையும் மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பரமக்குடி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் கோடை வெயில் சுட்டெரித்த நிலையில், கடந்த 2 நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், கிராமப் பகுதிகளில் பருத்தி விவசாயத்துக்கு தேவையான தண்ணீர் கிடைத்துள்ளது.

மிளகாய் சாகுபடி முடிவடைந்துள்ள நிலையில், தற்போது பெய்த மழையால் உழவுப்பணி மேற்கொண்டு எள் விதைகள் விதைக்கப்பட்டு வருகின்றன. எள் பயிருக்கு போதுமான ஈரப்பதம் இருந்தால், மகசூல் கிடைத்துவிடும். பரமக்குடி நகரில் பெய்த மழையால், குண்டும் குழியுமான சாலைகளில் நீர் தேங்கி மேலும் சேதமடைந்து வருகின்றன. முறையான வாருகால் வசதியில்லாததால், திருவள்ளுவர் நகர், பள்ளிவாசல் தெரு, பர்மா காலனி, எஸ்.எஸ்.கோவில் தெரு, மதுரை-ராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலைகளிலும், தெருக்களிலும் மழைநீருடன் கழிவுநீரும் கலந்து தேங்கியுள்ளன. இதனால், பல்வேறு இடங்களில் தொற்றுநோய் பரவும் அபாயமும், போக்குவரத்துக்கு இடையூறும் ஏற்பட்டுள்ளது. இதனை சீரமைக்க, நகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மே 15-இல் உதகையில் மலர்க்காட்சி தொடக்கம்**

உதகையில் கோடை சீசனின் முக்கிய நிகழ்வான மலர்க்காட்சி மே 15 முதல் 17-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் நடத்தப்படும் இந்த மலர்க்காட்சி ஒருசில நாள்கள் முன்னதாகவே நடத்தப்படுகிறது. கண்காட்சிக்காக தாவரவியல் பூங்காவில் ஒரு லட்சம் ரோஜா மலர்களைக் கொண்டு பிரம்மாண்ட தாஜ்மஹால் அமைக்கப்படுகிறது. இரு மலர் யானைகளும், ஆங்ரி பேர்டு உருவமும் அமைக்கப்படுவதோடு, 115 நாடுகளின் தேசிய மலர்களும் காட்சிக்காக வைக்கப்படுகின்றன. அதைத்தவிர, 25,000 மலர்த்தொட்டிகளும் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. புதிய பூங்கா பகுதியில் மலர்த் தொட்டிகளைக் கொண்டே மலர் பாத்திபோல வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, நீலகிரியில் நடைபெற்ற கோத்தகிரி காய்கறிக் கண்காட்சி, கூடலூர் வாசனைத் திரவியக் கண்காட்சி, உதகை ரோஜா கண்காட்சிக்கு இந்த ஆண்டில் கூடுதலான சுற்றுலாப் பயணிகள் வந்திருந்ததால், உதகை மலர்க்காட்சியிலும் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் பங்கேற்பர் என கருதப்படுகிறது. கண்காட்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகமும், தோட்டக்கலைத் துறையினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

## 22-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற 22-ஆம் தேதி நடைபெறுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் மாதம்தோறும் 3-வது மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடத்தப்படுவது வழக்கம். ஆனால், இப்போது மாவட்டத்தில் 1424-ம் பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெறுவதால் மே 4 முதல் 20-ஆம் தேதி வரை அனைத்து வகையான குறைதீர் கூட்டங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

எனவே, திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் இந்த மாதம் 4-வது வெள்ளிக்கிழமையான 22-ஆம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10 மணிக்கு நடைபெறும் குறைதீர் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகிக்கிறார். எனவே, மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்களது கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை இந்த மாதம் 15-ஆம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும், மாவட்டத்தின் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், வேளாண் துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளிலும் மனுக்களைப் போடலாம்.

**தருமபுரியில் இடி, மின்னலுடன் மழை**

தருமபுரியில் செவ்வாய்க்கிழமை மாலை இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. தருமபுரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக அவ்வப்போது லேசானது முதல் மிதமான மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை மாலை திடீரென வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர், சுமார் 4 மணியளவில் இடி, மின்னலுடன் பலத்தை மழை பெய்தது. ஒரு மணி நேரம் விடாது பெய்த மழையால், நெசவாளர் காலனி நெடுஞ்சாலையில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதேபோல, பிடமனேரி சாலை உள்ளிட்ட நகரின் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. சாலைகளில் வாகனங்கள் ஊர்ந்துசென்றன.

தருமபுரி பகுதியில் திடீரென பெய்த இந்த மழையால், வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவியது. இதேபோல, மாவட்டத்தின் பல்வேறு பகுதியிகளில் இடியுடன் கூடிய மழை பெய்தது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

**நாமகிரிப்பேட்டையில் ரூ.55 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்**

நாமகிரிப்பேட்டையில் வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் 950 மூட்டைகள் ரூ.55 லட்சத்துக்கு ஏலம் போயின. நாமகிரிப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில், மஞ்சள் ஏலம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த ஏலத்தில், தனியார் மஞ்சள் மண்டி வியாபாரிகள் உள்பட நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் ஏலத்துக்கு மஞ்சள் கொண்டு வந்திருந்தனர். இதில், தலா 65 கிலோ கொண்ட 950 மூட்டைகள் ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டன. அதில், விரலி ரகம் ஒரு குவிண்டால் குறைந்தபட்சமாக ரூ.7,389-க்கும், அதிகபட்சமாக ரூ.9,221-க்கும், உருண்டை ரகம் ஒரு குவிண்டால் குறைந்தபட்சமாக ரூ.6,799-க்கும், அதிகபட்சமாக ரூ.8,041-க்கும் ஏலம் போனது. பனங்காலி ரகம் ஒரு குவிண்டால் குறைந்தபட்சமாக ரூ.6,889-க்கும், அதிகபட்சமாக

ரூ.18,007-க்கும் ஏலம் போனது. இதில், மொத்தம் ரூ.55 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம் நடைபெற்றது.

**குமாரபாளையத்தில் காற்றுடன் பலத்த மழை**

குமாரபாளையம் மற்றும் சுற்றுப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை மாலை காற்றுடன் பலத்த மழை பெய்தது. கடந்த சில நாள்களாக கடும் வெயில் அடித்து வந்த நிலையில், செவ்வாய்க்கிழமை பிற்பகலில் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. தொடர்ந்து, பலத்த காற்று வீசியதையடுத்து இடி மின்னலுடன் பலத்த மழை பெய்யத் தொடங்கியது. சுமார் ஒரு மணி நேரம் பெய்த மழையால் சாலையில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. பலத்த மழையால் சாலையில் வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடி மெதுவாக ஊர்ந்து சென்றன.

தொடர்ந்து அவ்வப்போது பெய்து வரும் மழை விவசாயப் பணிகளுக்கு உதவியாக இருப்பதாக மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

அரியலூர் மாவட்ட தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி திங்கள்கிழமை அளிக்கப்பட்டது.அரியலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் 2014-15 ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 50 விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்ப முறையில் காய்கறி சாகுபடி, பூச்சி மேலாண்மை மற்றும் நோய் மேலாண்மை ஆகிய தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து முனைவர் கல்பனா மற்றும் சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்திலிருந்து தோட்டக்கலை வல்லுநர் ராஜா ஜோஸ்லின் ஆகியோர் காய்கறி சாகுபடியில் பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாட்டு முறைகளை எடுத்துரைத்தனர்.பயிற்சியின்போது விவசாயிகளை அரியலூர் மாவட்டத்தின் முன்னோடி விவசாயியான மல்லூர் ராசேந்திரனின் வயலுக்கு அழைத்துச் சென்று முருங்கை மற்றும் பெல்லாரி வெங்காய சாகுபடி பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

தோட்டக்கலைத் துணை இயக்குநர் (பொ) க.கணேசன், அரியலூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொ) ச.சரண்யா மற்றும் அரியலூர், திருமானூர் வட்டார உதவி வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டனர். விவசாயிகளின் கருத்துக் கேட்புக்கு பிறகு மேட்டூர் அணையை திறக்க வலியுறுத்தல்

**நன்னிலத்தில் 20.60 மிமீ. மழை**

நன்னிலத்தில் திங்கள்கிழமை 20.60 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.மே 4-ம் தேதி முதல் தொடங்கிய கத்தரிவெயிலின் (அக்னி நட்சத்திரம்) 9-வது நாளான செவ்வாய்க்கிழமை பகலில் காலையிலிருந்து

விட்டுவிட்டு நல்ல மழைபெய்தது. கத்திரிவெயில் தொடங்கும் முன்பு 100 டிகிரிக்கு மேல் வெயில் அடித்து மக்களை வாட்டிவதைத்தது. கத்தரி வெயிலை எப்படி தாங்கிகொள்ளப்போகிறோம் என்ற மக்களின் அச்சத்தை போக்கும் வகையில், கோடைமழை பெய்து வருகிறது. இதனால், வெயிலின் தாக்கம் குறைந்து மக்கள் மகிழ்ச்சியாக வெளியில் நடமாடி வருகின்றனர்.இந்த நிலையில், மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு:

நன்னிலம் - 20.60, திருவாரூர்- 8, மன்னார்குடி- 4, குடவாசல் - 4.70, திருத்துறைப்பூண்டி - 2.60, வலங்கைமான் - 2.40, நீடாமங்கலம் 1.40, பாண்டவையாறு தலைப்பு 1 மில்லி மீட்டர்.திங்கள்கிழமை மாலை வரை வானம் மேகமூட்டத்துடன் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. இதே தட்பவெப்ப நிலை செவ்வாய்க்கிழமை காலையிலிருந்தும் இருந்தது. மதியம் 12.30 மணியிலிருந்து மாவட்டத்தின் பல இடங்களிலும் பரவலாக நல்ல மழை பெய்தது.

**வேதாரண்யத்தில் பரவலாக மழை**

நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை முதல் பரவலாக மழை பெய்தது.தென்மேற்கு வங்கக் கடல், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மேலடுக்கு சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, வேதாரண்யம் பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை தெற்கு திசையில் இருந்து வீசிய பலத்த காற்றுடன் மழை பெய்தது.வேதாரண்யத்தில் மாலை 4 மணி வரை 13.6 மி.மீட்டர் மழை பதிவானது. இந்த மழை நகரப் பகுதியைவிடவும், தெற்கு கடலோர கிராமங்களில் அதிகமாக இருந்தது.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவக் கவுன்சில் நியமன உறுப்பினர்**

தமிழ்நாடு கால்நடை மருத்துவக் கவுன்சில் நியமன உறுப்பினராக த. ரவிமுருகன் நியமிக்கப்பட்டுள்ளார்.திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி பேராசிரியரான இவரை, தமிழக அரசின் பரிந்துரையின் பேரில் கால்நடை மருத்துவக் கவுன்சில் நியமன உறுப்பினராக நியமித்து ஆளுநர் ரோசய்யா உத்தரவிட்டுள்ளார். இதன்படி, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ரவி முருகன் இப்பதவியில் இருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா**

புதுச்சேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகள் பொருள்களுக்கான பணத்தை முறையாக பட்டுவாடா செய்ய வேண்டும் என இந்து முன்னணி வலியுறுத்தி உள்ளது.அதன் மாநிலத் தலைவர் வா.சனில்குமார் வெளியிட்ட அறிக்கை: புதுச்சேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒழுங்கற்ற விற்பனைக் கூடமாக மாறி வருகிறது. இங்கு நாள்தோறும் ஏலம் நடக்கிறது. பொருள் கொண்டு வரும் விவசாயிகளுக்கு அன்றே பணம் தரப்படுவதில்லை. மாறாக 15 நாள்கள் முதல் 1 மாதம் வரை அலைகழிக்கப்பட்டு பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.இதில் ஏலம் எடுக்கும் வியாபாரிகள் எந்தவிதமான மூலதனமும் இல்லாமல் பொருள்களை ஏலம் எடுத்து அதை விற்று அந்த பணத்தை தாமதமாக விவசாயிகளுக்கு வழங்குகின்றனர்.

விற்பனைக் கூட கண்காணிப்பாளர் உள்பட அதில் பணிபுரியும் அத்தனை அதிகாரிகளும் மறைமுகமாக வியாபாரிகளுக்கு உதவுகின்றனர். விவசாயிகள் அதிக வட்டிக்கு பணம் வாங்கியும், தன் மனைவியின் நகைகளை அடகு வைத்தும் வேலைக்கு ஆள் கிடைக்காத சூழலில் சிரமப்பட்டு விவசாயம் செய்து பொருள்களை கொண்டு வந்து நியாயமான விலை கிடைக்கும் என நம்பி ஒழுங்குமுறை கூடத்துக்கு வருகின்றனர். விற்பனைக் கூடத்தில் ஏலம் எடுக்கும் வியாபாரிகளுக்கு

அரசு காட்டியுள்ள வழிகாட்டுதல்களையும், விதிமுறைகளையும் அதிகாரிகள் நடைமுறைப்படுத்தவில்லை. விவசாயிகளை காப்பாற்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் முறைகேடுகளில் ஈடுபடும் அதிகாரிகளை அடையாளம் கண்டு துறைரீதியில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகள் கொண்டு வரும் பொருள்களுக்கு அன்றே பணம் பட்டுவாடா செய்ய வேண்டும் என சனில்குமார் அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**பாம்பன், தங்கச்சிமடத்தில் பலத்த மழை**



ராமேசுவரம், பாம்பன், தங்கச்சிமடம் பகுதியில் நேற்று நல்ல மழை பெய்தது. ஆனால் ராமேசுவரத்தில் மழை பெய்யாததால் அப்பகுதி மக்கள் ஏமாற்றமடைந்தனர். பலத்த மழை ராமேசுவரம், தங்கச்சிமடம், பாம்பன் உள்ளிட்ட பகுதிக ளில் கடந்த சில வாரங்களாக கோடை வெயில் வாட்டி வதைக்கிறது. இதனிடையே அக்னி நட்சத்திரம் தொடங்கி யதால் வெயிலின் தாக்கம் கூடுதலாக இருந்து வருகிறது. இத னால் ராமேசுவரம் பகுதி மக்களும், சுற்றுலா பயணிகளும் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இந்த நிலையில் நேற்று பாம்பன் பகுதியில் பலத்த மழை பெய்தது. காலை 10 மணி முதல் 11 மணி வரை பெய்த இந்த மழையால்

சாலையில் வந்த வாகனங்கள் முகப்பு விளக்கை எரியவிட்ட படியே வந் தன. இதேபோல சென்னை திருச்சி ரெயில்களும் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடியே இயக்கப்பட்டன. கத்திரி வெயில் சுட்டெரித்து வந்த நிலையில் பாம்பன் பகுதியில் நேற்று பெய்த மழையால் சூட்டின் தாக்கம் குறைந்து குளிர்ச்சியுடன் காணப்பட்டது. இதனால் அப் பகுதியை சேர்ந்த பொது மக்களும், மீனவ மக்களும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். பாம்பன் பகுதியில் நாட்டுப் படகில் மீன் பிடித்து வந்த மீனவர்கள் மழையையும் பொருட்படுத் தாமல் படகில் இருந்து மீன்களை இறக்கி எடை போட்டு வெளியூர்களுக்கு அனுப்பும் பணியில் தீவிரமாக ஈடுபட்டி ருந்தனர். இதேபோல் தங்கச்சிமடம் பகுதியிலும் பகல் நேரத் தில் சாரல் மழை பெய்து கொண்டே இருந்தது. பாம்பன், தங்கச்சிமடம் பகுதியில் நேற்று காலையில் நல்ல மழை பெய்த போதும் அருகில் உள்ள ராமேசுவரம் பகுதியில் மழை பெய்யவில்லை. இதனால் பொதுமக்கள் மற்றும் சுற் றுலா பயணிகள் கடும் வெயிலால் அவதிப்பட்டனர்.

**தஞ்சையில் பலத்த மழை கோடை வெப்பம் தணிந்தது**



தஞ்சையில் நேற்று பலத்த மழை பெய்தது. இதனால் கோடை வெப்பம் தணிந்தது. மழை தஞ்சையில் கடந்த சில நாட்களாக வெயில் கொளுத்தியது. இதனால் பகல் நேரத்தில் மக்கள் வெளியே வருவதற்கு அச்சப்பட்டு, வீட்டிற்குள்ளே முடங்கி கிடந்தனர். பகலில் கொளுத்தும் வெயிலின் தாக்கம் இரவு நேரத்திலும் எதிரொலித்தது. இதனால்

மழையை எதிர்பார்த்து மக்கள் காத்து இருந்தனர். நேற்றுமுன்தினம் தஞ்சையில் லேசாக மழை பெய்தது. நேற்று வழக்கம்போல் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. திடீரென பிற்பகல் 1.15 மணி அளவில் மழைமேகம் திரண்டு வந்தது. 1.30 மணி அளவில் மழைதூறல் விண்ணில் இருந்து வந்து மண்ணை தழுவியது. தூறலாக தொடங்கிய மழை சிறிது நேரத்தில் பலத்த மழையாக மாறியது. தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்ததால் தெருக்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தஞ்சை ரெயில்வே கீழ்பாலத்தில் வழக்கம்போல் இடுப்பு அளவுக்கு தண்ணீர் தேங்கி நின்றது. இந்த பலத்த மழை 45 நிமிடம் நீடித்தது. பின்னர் சிறிதுநேரம் மழை லேசாக தூறிக் கொண்டே இருந்தது. மழை பெய்த நேரத்தில் இருள் சூழ்ந்து காணப்பட்டதுபோல் இருந்ததால் வாகனங்களில் வந்தவர்கள் முகப்பு விளக்கு களை எரியவிட்டபடியே வாகனங்களை ஓட்டி சென்றனர். விவசாயிகள் எதிர்பார்ப்பு

இந்த மழையின் காரணமாக பூமி குளிர்ந்து குளிர்ந்த காற்றுவீசியது. கடந்த 4-ந்தேதி அக்னிநட்சத்திரம் தொடங்கியது. ஏற்கனவே தஞ்சையில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் அக்னி நட்சத்திர காலத்தில் இதைவிட அதிகமாக வெயிலின் தாக்கம் இருக்கும். இதனால் பொதுமக்கள் மழை பெய்ய வேண்டும் என்று எதிர்பார்த்து காத்து இருந்தனர். தற்போது பெய்து வரும் மழையினால் வெயிலின் தாக்கத்தில் இருந்து பொதுமக்கள் விடுபட்டு மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் தற்போது குறுவை சாகுபடி நடைபெற்று வருவதால் குறுவை சாகுபடி செய்ய வசதியாக மழை தொடர்ந்து பெய்ய வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். தஞ்சை மாவட்டத்தில் நேற்றுகாலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழைஅளவு மில்லிமீட்டரில் வருமாறு:- தஞ்சை-9.4, திருவையாறு-8, கும்பகோணம்-6, திருவிடைமருதூர்-3, மஞ்சலாறு-3.6, அணைக்கரை-9, பட்டுக்கோட்டை-7, அதிராம்பட்டினம்-5, ஈச்சன்விடுதி-6.2, மதுக்கூர்-7.2, பேராவூரணி-16.6.

**தஞ்சை மாவட்டத்தில் 4,550 எக்டேரில் குறுவை சாகுபடி**




தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 4,550 எக்டேரில் குறுவை சாகுபடி நடைபெற்றுள்ளது. குறுவை சாகுபடி தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுதோறும் குறுவை, சம்பா, தாளடி என முப்போக சாகுபடி நடைபெறுவது வழக்கம். குறுவை சாகுபடிக்காக ஜூன் 12-ந்தேதி மேட்டூர் அணை திறக்கப்படுவது வழக்கம். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக ஜூன் 12-ந்தேதி மேட்டூர் அணை திறக்கப்படவில்லை. இருந்தாலும் விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக தமிழகஅரசு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தியது. இதனால் ஓரளவுக்கு குறுவை சாகுபடி செய்யப்பட்டது. இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 45 ஆயிரம் எக்டேரில் குறுவை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, சாகுபடி பணிகள் நடைபெற்று வருகிறது. ஆழ்குழாய் கிணறு மூலம் குறுவை சாகுபடி பணியை விவசாயிகள் தொடங்கியுள்ளனர். இதுவரை 4 ஆயிரத்து 550 எக்டேரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறுவை சாகுபடிக்கு தேவையான உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.அதிகாரி கருத்து இது குறித்து தஞ்சை மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குனர் சேகர் கூறும்போது, தஞ்சை மாவட்டத்தில் 19 ஆயிரம்

எக்டேரில் கோடை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் குறைந்த அளவு தான் கோடை நெல் சாகுபடி நடைபெறும். ஆனால் இந்த ஆண்டு கூடுதல் பரப்பளவில் கோடை நெல் சாகுபடி நடைபெற்றுள்ளது. மேலும் தஞ்சை மாவட்டத்தில் 45 ஆயிரம் எக்டேரில் குறுவை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 4 ஆயிரத்து 550 எக்டேரில் சாகுபடி பணி முடிவடைந்துள்ளது. மேலும் 4 ஆயிரத்து 500 எக்டேரில் உளுந்து பயறு சாகுபடியும், 810 எக்டேரில் எள் சாகுபடியும் செய்யப்பட்டுள்ளது. குறுவை சாகுபடிக்கு தேவையான அளவுக்கு உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. 8 ஆயிரத்து 700 டன் யூரியா உரமும், 4 ஆயிரம் டன் டி.ஏ.பி. உரமும், 2 ஆயிரத்து 300 டன் பொட்டாஷ் உரமும், 1,100 டன் காம்ப்ளக்ஸ் உரமும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு, விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப வினியோகம் செய்யப்பட்டு வருகிறது என்றார்.விவசாயிகள் கோரிக்கை குறுவை சாகுபடி செய்வதற்கு ஏற்ப மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12-ந்தேதி தண்ணீர் திறக்க தமிழகஅரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக தமிழகத்திற்குரிய தண்ணீரை கர்நாடகஅரசிடம் இருந்து பெற வேண்டும். மேலும் குறுவை சாகுபடி தொடர்பாக பொதுப்பணித்துறை அமைச்சர், வேளாண்மைத்துறை அமைச்சர் பங்கேற்கும் கருத்து கேட்பு கூட்டத்தை தஞ்சையில் நடத்தி, விவசாயிகளின் கருத்துக்களை கேட்டறிய தமிழகஅரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**ஆந்திராவில் இருந்து தஞ்சைக்கு 1,508 டன் யூரியா உரம் சரக்குரெயிலில் கொண்டு வரப்பட்டது**



ஆந்திராவில் இருந்து தஞ்சைக்கு 1,508 டன் யூரியா உரம் சரக்குரெயிலில் கொண்டு வரப்பட்டது. யூரியா உரம் தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுதோறும் குறுவை, சம்பா, தாளடி என முப்போகம் நெல் சாகுபடி நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 45 ஆயிரம் எக்டேரில் குறுவை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நெல் சாகுபடிக்கு தேவையான உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் உர விற்பனை கடைகளில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தேவைக்கு ஏற்ப வெளிமாநிலங்களில் இருந்தும், வெளி மாவட்டங்களில் இருந்தும் உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. அதன்படி தஞ்சை மாவட்டத்திற்கு தேவையான யூரியா உரம் ஆந்திர மாநிலம் காக்கிநாடாவில் இருந்து சரக்கு ரெயில் மூலம் யூரியா உர மூட்டைகள் தஞ்சை ரெயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன. மொத்தம் 21 வேகன்களில் 1,508 டன் யூரியா உரம் வந்திருந்தது. பின்னர்

இந்த உர மூட்டைகள் சரக்குரெயிலில் இருந்து தொழிலாளர்கள் லாரியில் ஏற்றினர். இதையடுத்து லாரிகளில் ஏற்றப்பட்ட உர மூட்டைகள் தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் உள்ள தனியார் உர விற்பனை கடைகளுக்கு கொண்டு செல்லப்பட்டன. தட்டுப்பாடு இன்றி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலம் விவசாயத்திற்கு தேவையான யூரியா உரம் தட்டுப்பாடு இன்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வேளாண்மை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**தேனியில் கோடைகாலத்தில் பலத்த மழை**



தேனி  தேனியில் கோடைகாலத்தில் பலத்த மழை பெய்ததால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. பலத்த மழை தேனியில் கடந்த ஒரு மாத காலமாகவே கோடை காலம் என்ற அறிகுறி பெரிய அளவில் தெரியாமல் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. கடந்த வாரம் பலத்த மழை பெய்த நிலையில், கடந்த 2 நாட்களுக்கு முன்பு மழையின்றி வெயில் அடித்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் மழை பெய்தது. நேற்று பகலில் இருந்தே வானம் மேகம் மூட்டத்துடன் காணப்பட்டது. பிற்பகல் 3 மணியளவில் மிதமான காற்றுடன் பலத்த மழை பெய்தது. சுமார் 2 மணி நேரத்திற்கும் மேல் மழை நீடித்தது. இதனால் சலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஆறாக ஓடியது. பழைய பஸ் நிலையத்தை சுற்றிலும் பிரதான சாலைகளில்

தண்ணீர் குளம் போல் தேங்கியது. சாலைகள் சேதம் தேனி போலீஸ் நிலையம் முன்பு தண்ணீர் ஆறு போன்று பெருக்கெடுத்து ஓடியது. பெரியகுளம் சாலையில் பல்வேறு இடங்களில் சாலையே தெரியாத அளவுக்கு தண்ணீரும், சாக்கடை கழிவுநீரும் தேங்கி நின்றது. தொடர்ந்து இரவு 9 மணி வரை விட்டு,விட்டு மழை பெய்து கொண்டே இருந்தது. கோடை காலத்தில் தொடர்ந்து பெய்து வரும் இந்த மழையால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.அதே நேரத்தில் ஏற்கனவே சேதம் அடைந்து காணப்பட்ட சாலைகள் தற்போது ஏகப்பட்ட சேதம் அடைந்து விபத்துகளை ஏற்படுத்தும் அபாயத்தில் உள்ளதை எண்ணி மக்கள் வேதனை அடைந்து உள்ளனர். சாலை சேதம் அடைந்து காணப்பட்டதால், இரவு நேரத்தில் போக்குவரத்து நெரிசல் அதிக அளவில் ஏற்பட்டது. கம்பம் சாலையில் வாகனங்கள் மெல்ல ஊர்ந்து செல்லும் நிலைமை உருவானது.

## திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் வருகிற 22–ந் தேதி நடக்கிறது



திருவண்ணாமலை திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு நாள் வருகிற கூட்டம் வருகிற 22–ந் தேதி நடைபெறும் என கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

<u>குறைதீர்வு நாள் கூட்டம்</u>

திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் மாதந்தோறும் விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. கூட்டத்தில்

விவசாயிகள் கலந்து கொண்டு தெரிவிக்கும் குறைகள் மற்றும் புகார்களுக்கு வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை பராமரிப்பு துறை, கூட்டுறவுத்துறை, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, போக்குவரத்துத்துறை, பால்வளத்துறை உள்பட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் பதில் அளித்து பேச உள்ளனர்.மேலும் கடந்த மாதத்தில் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அரசு அலுவலர்கள் பேச உள்ளனர்.

22–ந் தேதி...

அதன்படி மே மாதத்திற்கான விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம், வருகிற 22–ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணியளவில் திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் நடைபெற உள்ளது.எனவே குறைதீர்வு நாள் கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு பொதுப்பிரச்சினைகளை கோரிக்கைகளாகவும், தனிநபர் பிரச்சினைகளை மனுக்கள் மூலமாகவும் தெரிவிக்கலாம் என கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

# தினகரன்

**சாரல் மழை: பொதுமக்கள் மகிழ்ச்சி**

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் பரவலாக நேற்று மிதமான சாரல் மழை பெய்தது. இதனால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அரியலூர் மாவட்டத்தில் கடந்தாண்டு போதிய பருவமழை பெய்யாத காரணத்தினால் பல ஏரி, குளங்கள் வறண்டு நீர்நிலைகள் வற்றி காணப்பட்டது. இதனால் நிலத்தடி நீர் வெகுவாக குறைந்து பல்வேறு கிராமங்களில் குடிநீர் கிடைக்காத நிலை ஏற்பட்டது. அரியலூரில் ஒரு சில இடங்களில் குடிநீர்தட்டுப்பாட்டை

கண்டித்து போராட்டமும் நடத்தினர். கோடைக்காலம் துவங்குவதற்கு முன்னரே இப்படி வறட்சியை சந்தித்த மக்களுக்கு கோடைகாலம் துவங்கியவுடன் வெய்யிலின் தாக்கம் மக்களை வாட்டி எடுத்தது. 100' டிகிரிக்கு மேல் நாளுக்கு நாள் வெய்யிலின் தாக்கம் அதிகரித்து கொண்டே வந்ததே தவிர குறையவில்லை. இதனால் கூலி தொழிலாளர்கள், கட்டிட தொழிலாளர்களின் தங்கள் பணியை செய்வதற்கு சிரமப்பட்டனர். மேலும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை வெப்பம் தாங்காமல் வீட்டிற்குள்ளே முடங்கி கிடக்கும் நிலை ஏற்பட்டது. வெப்பத்தின் தாக்கத்தை சமாளிக்க இளநீர், மோர், குளிர்பாணங்கள், நுங்கு, தர்பூசணி, வெள்ளரிபிஞ்சு ஆகியவற்றை உட்கொண்டு சூட்டை தணித்து வந்தனர். இந்நிலையில் அக்னி நட்சத்திரம் என்கின்ற கத்திரி வெய்யில் தற்போது நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக அக்னி வெய்யிலின் உக்கிரம் பொதுமக்களை வாட்டியது. இந்த நிலையில் நேற்று தட்பவெப்ப நிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டு காலை முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் குளிர்ந்த காற்று வீசியது. அதைத்தொடர்ந்து காலை 9 மணி அளவில் சாரல் மழை பெய்யத் துவங்கியது. தொடர்ந்து கால் மணி நேரம் சாரல் மழை பெய்ததது. அதன்பின் விட்டு விட்ட காலை 10.30 மணி வரை மழை பெய்தது.அரியலூர் மாவட்டம் முழுவதும் இந்த சாரல் மழை பரவலாக பெய்தது. இதனால் பூமி குளிர்ந்து, கோடை வெயிலின் தாக்கம் குறைந்து மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். விவசாயிகளும் இந்த சாரல் மழை விவசாயத்துக்கு ஏற்றது எனச்சொல்லி மகிழ்ந்தனர்.

**அரவக்குறிச்சியில் அடை மழை**

அரவக்குறிச்சி, : அக்னி நட்சத்திரம் துவங்கியதை அடுத்து அரவக்குறிச்சி பகுதியில் அனல் காற்றுடன் வெயில் வாட்டி வதைக்கின்ற நிலையில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் விடிய விடிய மழை

பெய்தது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கரூர்: கரூரில் நேற்று காலை முதல் மாலை வரை அவ்வப்போது சாரல் மழை பெய்ததால் கரூர் குளிர்ச்சியாக காணப்பட்டது.

வனத்தில் பசுமை திரும்புகிறது இடம் பெயர்ந்த விலங்குகள் வருகை

ஊட்டி, : நீலகிரியில் தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில், அனைத்து வனங்களிலும் பசுமை திரும்புயுள்ளது. இடம்பெயர்ந்த வன விலங்குகள் மீண்டும் நீலகிரி வனத்திற்கு வந்துள்ளதால் சுற்றுலா பயணிகள் அதனை கண்டு மகிழ்ச்சியடைந்து வருகின்றனர். ஆண்டு தோறும் நவம்பர் மாதம் துவங்கி பிப்ரவரி மாதம் வரை பனி பொழிவு அதிகமாக காணப்படும். இச்சமயங்களில் மழை பெய்யாமல், பகல் நேரங்களின் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். தொடர்ந்து மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை கடும் வெயில் நிலவும் நிலையில், பெரும்பாலான வனப்பகுதிகள் காய்ந்து போய்விடும். அதேபோல், நீரோடைகளில் முற்றிலும் தண்ணீர் குறைந்து வறண்டு காட்சியளிக்கும். இதனால், போதிய உணவு கிடைக்காமல் விலங்குகள் நீர் நிலைகள் தேடி செல்வது வழக்கம். குறிப்பாக, முதுமலை, மசினகுடி, பண்டிப்பூர் போன்ற பகுதிகளில் உள்ள விலங்களும் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துவிடும். இச்சமயங்களில், இங்கு செல்லும் சுற்றுலா பயணிகள் கண்களுக்கு எந்த ஒரு விலங்கும் தென்படாது. இதனால், முதுமலை மற்றும் மசினகுடி போன்ற பகுதிகளுக்கு செல்லும் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பது வழக்கம். ஆனால், இம்முறை கடந்த இரு மாதங்களாக நீலகிரியில் மழை பெய்து வரும் நிலையில், அனைத்து வனங்ளிலும் பசுமை திரும்ப ஆரம்பித்துள்ளது. அதேபோல், நீரோடைள் மற்றும் ஆறுகளிலும் தண்ணீர் ஓடுகிறது. இதனால், இடம்பெயர்ந்த விலங்குகள் மீண்டும் திரும்பத்துவங்கியுள்ளன. இதனால், ஊட்டியில் இருந்து முதுமலை செல்லும் சாலையோரங்களில் காட்டு யானைகள்,

மான்கள் மற்றும் காட்டெருமைகள் போன்ற விலங்குகள் அடிக்கடி சுற்றுலா பயணிகள் கண்களில் தென்படுகின்றன. இதனை கண்டு சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்து வருகின்றனர். இதுமட்டுமின்றி, மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் வனங்களில் பசுமை திரும்பியுள்ளதால், வி லங்குகள் நாடமாட் டம் அதிகரித்துள்ளது. அதே சமயம், கோடையில் பச்சை பசேல் என காட்சியளிக்கும் வனங்கள், அணைகள் மற்றும் தேயிலை தோட்டங்களை கண் டு சுற்றுலா பயணிகள் பிரமிக்கின்றனர்.

**தொழிற்சாலைகளில் தேயிலை உலர வைக்க கூடுதல் நேரம்**

குன்னூர், : தொடர் மழையால் ஆலைகளில் பசுந்தேயிலை உலர வைக்கும் பணிக்கு கூடுதல் நேரமாகிறது. நீலகிரியில் கடந்த 1 மாதத்திற்கு மேலாக பரவலான மழை பெய்து வருவதால் தேயிலை மகசூல் அதிகரித்து இதனை முழுமையாக உற்பத்தி செய்ய இயலாமல் தொழிற்சாலைகள் திணறி வருகிறது. மேலும் வரத்து அதிகரிப்பால் பெரும்பாலான தொழிற்சாலைகளில் தற்போது பசுந்தேயிலை கொள்முதலில் கோட்டா முறை அமல்படுத்தப்பட்டுள்ளதால் உரிய நேரத்தில் பசுந்தேயிலையை அறுவடை செய்ய இயலாமல் விவசாயிகள் அவதியுற்று வருகின்றனர். ஆனாலும் பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்காததால் விவசாயிகளுக்கு கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. குன்னூரிலுள்ள ஏல மையங்களில் தேயிலை தூள் விற்பனையும் எதிர்பார்த்தார் போல் நடக்கவில்லை. மகசூல் காலங்களில் தேயிலை தூள் தரமற்று இருக்கும் என வர்த்தர்கள் மத்தியில் கருத்து நிலவி வருவதால் தேயிலை தூள் தேக்கமடைந்து வருகிறது. இருப்பினும் தொழிற்சாலைகளுக்கு வரும் பசுந்தேயிலை வரத்து அதிகரித்து வருகிறது. சாரல் மழை நீடித்து வருவதால் தொழிற்சாலைகளில் உள்ள டிரப்புகளில் பசுந்தேயிலை உலர வைப்பதில் தாமதம் ஏற்படுவதால் தொழிலாளர் 1 மணி நேரத்திற்கு ஒரு முறை பசுந்தேயிலையை உலர வைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இப்பணிக்கு கூடுதல் நேரமாவதால் பிற பணிகள் பாதிக்கப்படுவதாக ஆலைநிர்வாகிகள் தெரிவித்தனர்.

தொழிலாளர்கள் கூறுகையில், 'பசுந்தேயிலை வரத்து அதிகரிப்பால் குறிப்பிட்ட இலக்கை விட தினமும் கூடுதலாக தேயிலையை உலர வைக்க வேண்டியுள்ளதுஆ. இதனால் அதிக நேரம் பிடித்து பிற பணி பாதிக்கிறது' என்றனர்.

**கோமாரி நோய் தடுப்பு மருந்துதெளிப்பு**

குன்னூர், : தமிழகத்திலுள்ள கால்நடைகளுக்கு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு கோமாரி நோய் அதிகளவில் தாக்கி இருந்தது. இதனால் ஈரோடு, கோவை, பொள்ளாச்சி, திருப்பூர் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் ஆயிரக்கணக்களில் கால்நடைகள் உயிரிழந்தன. இதனை தவிர்க்க மாநிலம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கால்நடை துறை சார்பில் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி ஆண்டுதோறும் 2 கட்டமாக போடப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக மார்ச் மாதமும், 2வது கட்டமாக செப்டம்பர் மாதமும் போடப்படுகிறது. இந்நிலையில் தற்போது நீலகிரியில் கோடை விழா துவங்கப்பட்டதையொட்டி சமவெளி பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வெளிநாடு, வெளிமாநிலம் மற்றும் வெளி மாவட்டங்களில் வந்து செல்கின்றனர். இதனால் இங்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு கால்நடைகள் மூலம் மீண்டும் கோமாரி நோய் தாக்காமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சாலைகளில் சோடியம் கார்பனேட், பிளிச்சிங் பவுடர் ஆகியவை தெளிக்கப்பட்டு வருகிறது. இந்நடவடிக்கை ஜெகதளா பேரூராட்சி நிர்வாகம் மூலம் எடுக்கப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சி சார்பில் குன்னூர்ஊட்டி தேசிய நெடுஞ்சாலையில் அருவங்காடு, பிக்கட்டி, கோபாலபுரம் ஆகிய பகுதிகளில் பேரூராட்சி தலைவர் உஷா மேற்பார்வையில் ஊழியர்கள் சாலைகளில் பிளிச்சிங் பவுடர்களை கொட்டி வருகின்றனர். சாலையில் செல்லும் வாகனங்களின் டயர்களில் இந்த மருந்து ஒட்டுவதன் மூலம் கோமாரி நோய் வராமல்

தடுக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**அதிக விலைக்கு உரம் விற்றால் நடவடிக்கை**

பெரம்பலூர், : அதிக விலைகு உரம் விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் எச்சரிக்கை விடுத்துள்ளார். 20142015ம் ஆண்டு பெரம்பலூர் மாவட்டத்துக்கு 12,378 டன் யூரியா, 2,226 டன் டிஏபி, 4,374 டன் பொட்டாஷ் மற்றும் 14,086 டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் வினியோகிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு பயிர்களின் உரத் தேவைகளை கணக்கிட்டு அதற்குத்தகுந்தபடி உரங்களை முன்கூட்டியே வாங்கி இருப்பு வைக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.உர விற்பனையாளர்கள் தேவையான உரங்களை முன்கூட்டியே கொள்முதல் செய்து, தகுந்த நேரத்தில் விவசாயிகளுக்கு வினியோகம் செய்யவேண்டும். விவசாய உபயோகத்துக்கு என ராசயன உரங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்கி வருகிறது. நேரடி விவசாய உபயோகத்துக்கு மட்டுமே இந்த உரங்களைப் பயன்படுத்த வேண்டும். விற்பனையாளர்கள், மானியத்தில் வழங்கப்படும் உரங்களை விவசாயிகளுக்கு மட்டுமே விற்பனை செய்யவேண்டும். தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்வது உரக் கட்டுப்பாட்டு ஆணையை மீறியசெயலாகும். விற்பனையாளர்கள் உரங்களை அதிகவிலைக்கு விற்றாலோ, உரங்களுக்குத் தகுந்த பில் இல்லாமல் விற்பனை செய்தாலோ மற்றும் உரங்களை விவசாயம் அல்லாத பிற தொழில்களுக்கு விற்பனை செய்தாலோ அவர்கள் மீது உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985ன்படியும், அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955ன்படியும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் தரேஸ்அகமது எச்சரித்துள்ளார்.கிணற்றில் குதித்து பெண் தற்கொலைமணப்பாறை, : மணப்பாறை அருகே உள்ள தீராம்பட்டியை சேர்ந்தவர் சார்லஸ். இவருக்கு சொந்தமான விவசாய கிணறு பூமாலைபட்டியில் உள்ளது. இந்த கிணற்றில் நேற்று மாலை

அடையாளம் தெரியாத 50வயது மதிக்கத்தக்க பெண் பிணம் மிதந்தது.

இதைப்பார்த்த அப்பகுதி மக்கள் மணப்பாறை போலீசுக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் வந்து பார்த்த போது, கிணற்றின் அருகே ஒரு பையில் 5 புடவைகள் மற்றும் அவரது செருப்புகள் இருந்தது. மேலும் அருகில் இருந்த பம்பு செட் சுவரில் 2 போன் நம்பர்கள் பச்சை நிறத்தில் எழுதப்பட்டிருந்தது. போலீசார் அதில் ஒரு எண்ணை தொடர்பு கொண்டு விசாரித்த போது, எதிர்முனையில் பேசியவர் பெரம்பலூர் மாவட்டம் அய்யலூர் பெருமாள் கோயில் தெருவை சேர்ந்த வாசுதேவன் என்பது தெரியவந்தது. விசாரணையில், வாசுதேவன் லாரி உரிமையாளர் என்பதும், கிணற்றில் பிணமாக மிதந்தவர் வாசுதேவனின் மனைவி அஜந்தா (48) என்பதும் தெரியவந்தது. நேற்றுமுன்தினம் வீட்டில் கணவருடன் ஏற்பட்ட தகராறில் கோபித்துக்கொண்டு சென்றவர், இங்கு வந்து கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டதும் தெரியவந்தது. அஜந்தாவுக்கு ஜீவன்(24), ரஞ்சித் (22) ஆகிய 2 மகன்கள் உள்ளனர். பின்னர் மணப்பாறை தீயணைப்பு வீரர்கள் வந்து சடலத்தை கைப்பற்றி மணப்பாறை அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து இன்ஸ்பெக்டர் தினேஸ்குமார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

## குமரியில் தொடர்மழை

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் வெப்பநிலை மாறி குளிர்ந்த காலநிலை நிலவுகிறது. கடந்த இரண்டு நாட்களாக இடைவிடாது மழை பெய்து வருகிறது. மழை காரணமாக மாவட்டத்தின் அனைத்து அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. பேச்சிப்பாறை அணைக்க வினாடிக்கு 62 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 74 கனஅடி தண்ணீரும், சிற்றாறு -2 அணைக்கு 45 கனஅடி தண்ணீரும் வந்து கொண்டிருக்கிறது. சாரல் மழை

காரணமாக கோடை விடுமுறையில் வரும் சுற்றுலா பயணிகளும் ஆனந்தம் அடைந்துள்ளனர்.

கோடை மழையால் பால் உற்பத்தி அதிகரிப்பு_: நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் அதிகம்_



திருநெல்வேலி குறிச்சி பகுதியில் மழையால் முளைத்துள்ள பசுந்தீவனங்களை தின்னும் கால்நடைகள். படம்: மு. லெட்சுமி அருண்.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் இவ்வாண்டு கோடை மழையால் பால் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி அதிகரித்திருப்பதாக ஆவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் இம்மாவட்டங்களில் போதுமான கோடைமழை பெய்ய வில்லை. இதனால் மேய்ச்சல் நிலங்களில் புல், பூண்டுகள் முளைக்காமல் மேய்ச்சலுக்கு வழி ஏற்படவில்லை. ஆனால் இவ் வாண்டு கடந்த ஏப்ரல் தொடங்கி தற்போது வரை திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கோடை மழை பெய்து வருகிறது. தொடர்ச்சியான இந்த மழையால் மேய்ச்சல் நிலங்கள்

பச்சைபசேலென்று காட்சியளிக்கின்றன. தரிசு நிலங்களிலும் புல்வெளிகள் காணப்படுகின்றன.

**புல்வெளி அதிகரிப்பு**

திருநெல்வேலி கால்நடைத் துறை இணை இயக்குநர் கங்கராஜ் கூறும்போது, `திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 3 ஆயிரம் ஹெக்டேர் மேய்ச்சல் நிலப்பரப்பு இருக்கிறது. கடந்த ஆண்டு கோடையில் இந்த மேய்ச்சல் நிலத்தில் புல்வெளிகள் உருவாகவில்லை. ஆனால் இவ் வாண்டு பெய்துவரும் மழையால் மேய்ச்சல் பரப்பில் பச்சை புல் வெளிகள் உருவாகியிருக்கின்றன. இது கால்நடைகளின் தீவனத்துக்கு கைகொடுக்கிறது' என்றார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் கடந்த ஏப்ரலில் 100.45 மி.மீ. மழை பதிவானதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இது கடந்த ஆண்டைவிட 60 மி.மீ. அதிகமாகும். இந்த கோடை மழையால் கால்நடைகளுக்கான பசுந்தீவனங்கள் உற்பத்தியும் அதிகரித்திருக்கிறது.

**தீவன உற்பத்தியும் உயர்வு**

மேலும் இவ்வாண்டு திருநெல் வேலி, தூத்துக்குடி மாவட்டங் களில் நெல் விளைச்சலும் இலக்கை மிஞ்சி இருந்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் 2014-15-ம் ஆண்டில் 83,100 ஹெக்டேரில் நெல் விவசாயத்துக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த இலக்கை மிஞ்சி 85,407 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு 4.55 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இதனால் மாடுகளுக்கு வைக்கோல் கிடைப் பதிலும் பிரச்சினை எழவில்லை.

கோடை மழை, மேய்ச்சல் நிலப் பரப்பு, பசுந்தீவன உற்பத்தி அதிகரிப்பு, வைக்கோல் தட்டுப்பாடில்லாமல் கிடைப்பது போன்ற சாதகமான அம்சங் கள் இவ்வாண்டு அதிகமிருந்த தால் பால் உற்பத்தியும் அதி கரித்திருப்பதாக விவசாயிகளும், கால்நடை வளர்ப்போரும் தெரிவிக்கிறார்கள்.

**பால் உற்பத்தி**

திருநெல்வேலி ஆவின் வட்டாரத்தில் விசாரித்தபோது, `திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த ஆண்டு கோடை காலத்தில் நாளொன் றுக்கு 63 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. இவ்வாண்டு உற்பத்தி அதிகரித் திருப்பதால் நாளொன்றுக்கு 86 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இது கடந்த ஆண்டைவிட 23 ஆயிரம் லிட்டர் அதிகம். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி அதிகரித்திருக்கிறது என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.__